www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

**Lang. Code : 17**

इस पुस्तिका में **20** पृष्ठ हैं ।

This booklet contains **20** pages.

# ATA-19-I

**प्रश्न-पत्र I / PAPER I**

**तमिल भाषा परिशिष्ट**

**Tamil Language Supplement**

**भाग IV & V / PART IV & V**

**परीक्षा पुस्तिका संकेत**

**Test Booklet Code**

**A**

**परीक्षा पुस्तिका संख्या**

**Test Booklet No.**

**इस परीक्षा पुस्तिका को तब तक न खोलें जब तक कहा न जाए ।**

**Do not open this Test Booklet until you are asked to do so.**

**इस परीक्षा पुस्तिका के पिछले आवरण (पृष्ठ 19 व 20)पर दिए निर्देशों को ध्यान से पढ़ें ।**

**Read carefully the Instructions on the Back Cover (Page 19 & 20) of this Test Booklet.**

**तमिल में निर्देशों के लिए इस पुस्तिका का पृष्ठ 2 देखें । / For instructions in Tamil see Page 2 of this Booklet.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. यह पुस्तिका मुख्य परीक्षा पुस्तिका की एक परिशिष्ट है, उन परीक्षार्थियों के लिए जो या तो भाग IV (भाषा I) **या** भाग V (भाषा II) **तमिल** भाषा में देना चाहते हैं, लेकिन **दोनों नहीं** ।
2. परीक्षार्थी भाग I, II, III के उत्तर मुख्य परीक्षा पुस्तिका से दें और भाग IV व V के उत्तर उनके द्वारा चुनी भाषाओं से ।
3. अंग्रेज़ी व हिन्दी भाषा पर प्रश्न मुख्य परीक्षा पुस्तिका में भाग IV व भाग V के अन्तर्गत दिए गए हैं । भाषा परिशिष्टों को आप अलग से माँग सकते हैं ।
4. इस पृष्ठ पर विवरण अंकित करने एवं उत्तर पत्र पर निशान लगाने के लिए **केवल काले/नीले बॉल पॉइंट पेन** का प्रयोग करें ।
5. इस भाषा पुस्तिका का **संकेत** है **A** । यह सुनिश्चित कर लें कि इस भाषा परिशिष्ट पुस्तिका का संकेत, उत्तर पत्र के **पृष्ठ-2** एवं मुख्य परीक्षा पुस्तिका पर छपे संकेत से मिलता है । अगर यह भिन्न हो, तो परीक्षार्थी दूसरी भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका लेने के लिए निरीक्षक को तुरन्त अवगत कराएँ ।
6. इस परीक्षा पुस्तिका में **दो** भाग IV और V हैं, जिनमें **60** वस्तुनिष्ठ प्रश्न हैं, जो प्रत्येक 1 अंक का है :
   भाग-IV : भाषा I - (तमिल) (प्र. 91 से प्र. 120)
   भाग-V : भाषा II - (तमिल) (प्र. 121 से प्र. 150)
7. भाग-IV में भाषा-I के लिए 30 प्रश्न और भाग-V में भाषा-II के लिए 30 प्रश्न दिए गए हैं । इस परीक्षा पुस्तिका में केवल तमिल भाषा से संबंधित प्रश्न दिए गए हैं । **यदि भाषा-I और/या भाषा-II में आपके द्वारा चुनी गई भाषा(एँ) तमिल के अलावा है तो कृपया उस भाषा वाली परीक्षा पुस्तिका माँग लीजिए । जिन भाषाओं के प्रश्नों के उत्तर आप दे रहे हैं वह आवेदन पत्र में चुनी गई भाषाओं से अवश्य मेल खानी चाहिए ।**
8. **परीक्षार्थी भाग-V (भाषा-II) के लिए, भाषा सूची से ऐसी भाषा चुनें जो उनके द्वारा भाषा I (भाग-IV) में चुनी गई भाषा से भिन्न हो ।**
9. रफ कार्य परीक्षा पुस्तिका में इस प्रयोजन के लिए दी गई खाली जगह पर ही करें ।
10. सभी उत्तर केवल OMR उत्तर पत्र पर ही अंकित करें । अपने उत्तर ध्यानपूर्वक अंकित करें । उत्तर बदलने हेतु श्वेत रंजक का प्रयोग निषिद्ध है ।

## *INSTRUCTIONS FOR CANDIDATES*

1. This booklet is a supplement to the Main Test Booklet for those candidates who wish to answer **EITHER** Part IV (Language I) **OR** Part V (Language II) in **TAMIL** language, but **NOT BOTH**.
2. Candidates are required to answer Parts I, II, III from the Main Test Booklet and Parts IV and V from the languages chosen by them.
3. Questions on English and Hindi languages for Part IV and Part V have been given in the Main Test Booklet. Language Supplements can be asked for separately.
4. Use **Black/Blue Ball Point Pen only** for writing particulars on this page / marking responses in the Answer Sheet.
5. The CODE for this Language Booklet is **A**. Make sure that the CODE printed on **Side-2** of the Answer Sheet and on your Main Test Booklet is the same as that on this Language Supplement Test Booklet. In case of discrepancy, the candidate should immediately report the matter to the Invigilator for replacement of the Language Supplement Test Booklet.
6. This Test Booklet has **two** Parts, IV and V, consisting of **60** Objective Type Questions, each carrying 1 mark :
   Part-IV : Language I - (Tamil) (Q. 91 to Q. 120)
   Part-V : Language II - (Tamil) (Q. 121 to Q. 150)
7. Part-IV contains 30 questions for Language-I and Part-V contains 30 questions for Language-II. In this Test Booklet, only questions pertaining to Tamil language have been given. **In case the language/s you have opted for as Language-I and/or Language-II is a Language other than Tamil, please ask for a Test Booklet that contains questions on that language. The language being answered must tally with the languages opted for in your Application Form.**
8. **Candidates are required to attempt questions in Part -V (Language-II) in a language other than the one chosen as Language-I (in Part-IV) from the list of languages.**
9. Rough work should be done only in the space provided in the Test Booklet for the same.
10. The answers are to be recorded on the OMR Answer Sheet only. Mark your responses carefully. No whitener is allowed for changing answers.

परीक्षार्थी का नाम (बड़े अक्षरों में) : ____________________
Name of the Candidate (in Capitals) :

अनुक्रमांक : (अंकों में) ____________________
Roll Number : in figures

: (शब्दों में) ____________________
: in words

परीक्षा केन्द्र (बड़े अक्षरों में) : ____________________
Centre of Examination (in Capitals) :

परीक्षार्थी के हस्ताक्षर : ____________ निरीक्षक के हस्ताक्षर : ____________
Candidate's Signature : Invigilator's Signature :

Facsimile signature stamp of
Centre Superintendent ____________________

A

www.prepp.in



**Lang. Code : 17**

இந்த நூற்கட்டு **20** பக்கங்கள் கொண்டது

# ATA-19-I

## தாள் I

தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு

**A**

## தமிழ் மொழி துணை நூற்கட்டு
## பகுதி IV & V

**அவிழ்க்கச் சொல்லப்படும் வரை யாரும் இந்த நூற்கட்டை அவிழ்க்கக் கூடாது. இந்த நூற்கட்டின் பின்பக்க உறைப்பகுதியில் (பக்கம் 19 & 20) காணப்படும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்.**

### தேர்வு எழுதுவோர்க்கான வழிகாட்டும் குறிப்புகள்

1. இந்நூற்கட்டு முக்கிய தேர்வு நூற்கட்டுக்கான இணைப்பாகும். இது பகுதி **IV** (மொழி I) **அல்லது** பகுதி V க்கு (மொழி **II**) **தமிழ்** மொழியில் விடையளிக்க விரும்புவோர்க்கு மட்டுமே உரியது. **இரண்டிற்கும் உரியது அல்ல.**
2. தேர்வு எழுதுவோர் முக்கிய தேர்வு நூற்கட்டின் பகுதி **I, II, III** க்கும் அவர்கள் தேர்ந்தெடுத்த மொழிகளின் பகுதி **IV, V** ஆகியவற்றிற்கும் விடை அளிக்கவும்.
3. ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளின் பகுதி **IV** மற்றும் பகுதி **V** ற்கான வினாக்கள் முக்கிய தேர்வு நூற்கட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மொழி இணைப்பைத் தனியாக வாங்கிக் கொள்ள வேண்டும்.
4. இப் பக்கத்தில் வினவப்படும் உரிய விவரங்களை/விடைத்தாளில் நீர் மேற்கொள்ளும் பதில் வினையை **நீலம் மை பந்துருள்முனைப் பேனாவினால் மட்டும் நிரப்புக.**
5. இந் நூற்கட்டின் சங்கேதக் குறியீடு **A** ஆகும். இந் நூற்கட்டின் மீதும் இதன் **பக்கம் 2-லும்** அச்சாகி உள்ள சங்கேதக் குறியீடுகள் இரண்டும் ஒன்றே தானா என்பதைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்க. மேலும் உம் தேர்வு நூற்கட்டு எண்ணும் விடைத்தாள் எண்ணும் ஒன்றேதானா என்பதையும் சரிபார்த்து உறுதி செய்துகொள்க. இவை ஒன்றோடு ஒன்று முரணாக இருக்குமேயானால் தேர்வு எழுதுபவர் இது பற்றி உடனே தேர்வு மேற்பார்வையாளர் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். வேறொரு தேர்வு நூற்கட்டு மற்றும் வேறொரு விடைத்தாள் ஆகிய இரண்டையும் அவற்றிற்குப் பதிலாகக் கேட்டுப் பெற வேண்டும்.
6. இது தேர்வு நூற்கட்டு *2* பகுதிகள் கொண்டது. ஒரே ஒரு மதிப்பெண் நேரிய *60* பல் விடை வினாக்கள் கொண்ட இப்பகுதிகள் முறையே **IV & V** என்றவாறாக அமையும்.
   பகுதி **IV** : மொழி - **I** (தமிழ்) (வினாக்கள் 91 முதல் 120 வரை)
   பகுதி **V** : மொழி - **II** (தமிழ்) (வினாக்கள் 121 முதல் 150 வரை)
7. பகுதி **IV** இல் மொழி **I** க்கும், பகுதி **V** இல் மொழி **II** க்கும் தலா *30* வினாக்கள். இத் தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிகளுக்குரிய வினாக்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. இத்தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிக்கான வினாக்கள் மட்டுமே உள்ளன. **தமிழ் மொழி நீங்கப் பிறமொழி எதனையேனும் மொழி I & II க்கு நீர் தெரிவு செய்திருப்பின் அம்மொழிக்குரிய வினாக்கள் கொண்ட தேர்வு நூற்கட்டைக் கேட்டுப் பெறவும். நீர் தேர்வு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி தேர்ந்தெடுப்பும், தேர்வு நூற்கட்டில் எழுதியுள்ள விடை மொழியும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.**
8. **தேர்வு எழுதுவோர், மொழிகள் பட்டியலிலிருந்து தேர்ந்து கொண்ட மொழி I (பகுதி IV இல்) நீங்கலாகப் பிற வேறொரு மொழியை மொழி II (பகுதி V க்கு) தேர்ந்து கொண்டு விடையளிக்க வேண்டும்.**
9. இத் தேர்வு நூற்கட்டில் ஒதுக்கப்பட்டுள்ள முன்வரைவுப் பகுதியில் மட்டும் திருந்தாப் பதிவுகள் இடம் பெற வேண்டும்.
10. ஓ.எம்.ஆர் (OMR) விடைத்தாளில் மட்டுமே விடைகள் பதிவு செய்யப்பட வேண்டும். பதில் வினைகளைக் கவனமாகப் பதிவு செய்க. விடையைத் திருத்தம் செய்து மாற்றி எழுத வெண்ணிற மை ஏதும் பயன்படுத்தக் கூடாது.

தேர்வு எழுதுபவர் பெயர்(தலைப்பு எழுத்துகளில்) ____________________

தேர்வு வரிசை எண் : எண்ணில் ____________________

: எழுத்தில் ____________________

தேர்வு மையம் (தலைப்பு எழுத்துகளில்) ____________________

தேர்வு எழுதுபவர் கையொப்பம் ____________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் ____________________

Facsimile signature stamp of Centre Superintendent ____________________

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide



தேர்வு எழுதுவோர் **தமிழைத்** தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே **பகுதி - IV** [**கே.எண்:** ***91 - 120***] க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part - IV [Q.No. 91-120]**, if they have opted **TAMIL** as **LANGUAGE - I** only.

Prepp Your Personal Exam Guide

www.prepp.in



## PART – IV
## LANGUAGE – I
## தமிழ்

பகுதி தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE – I) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே – IV (கே.எண்: 91-120) க்கான விடைகளைத் தரவேண்டும்.

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 91-99)

கூத்து என்னும் சொல் முதலில் நடனத்ததையும் பின்பு கதை தழுவி வரும் கூத்தாகிய நாடகத்தையும் குறித்தது. இயற்றமிழைப் புலவரும், இசைத் தமிழைப் பாணரும் பேணி வளர்த்தாற் போலவே நாடகத்தையும் நடனத்தையும் கூத்தர் என்பவர் பேணி வளர்த்தனர். நடனம் ஆடும் மகளிர் விறலியர் எனப்பட்டனர்; உள்ளக் குறிப்புப் புறத்தில் தோன்றும் படி திறம்பட நடிப்பவள் விறலி எனப்பட்டாள். கூத்தி, ஆடுமகள், ஆடுகள மகள் என நடனமாடிய மகள் சங்க காலத்தில் பல பெயர்களைப் பெற்றிருந்தாள். நடனமாடிய மகன் கூத்தன், ஆடுமகன் ஆடுகள மகன் என்று பெயர் பெற்றான். இவர்களே கதை தழுவி வரும் கூத்துகளை ஆடினார். அங்ஙனம் ஆடிய பொழுது ஆண்மகன் பொருநன் என்று பெயர் பெற்றான்.

கூத்து அல்லது நாடகம் என்பது நுண்கலைகளுள் ஒன்றாகும். வெளி நாடுகளுடன் பன்னெடுங்காலமாக வாணிகம் செய்து வந்த தமிழர் – இயல் இசைக்கலைகளில் வல்லராயிருந்த தமிழர் – நாடகக் கலையிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தனர் என்று கொள்வது தவறாகாது. இயல் இசை என்னும் இரண்டு பிரிவுகளும் கேட்பவருக்கு இன்பத்தைத் தருவன; நாடகம் கேள்வி இன்பத்தோடு காட்சி இன்பமும் பயப்பதாகும் எனவே நாடகமே மிக்க பயனுள்ளதாக அறிவுடையோர் கருதுவர். நாடகத்தில் இயல், இசை ஆகிய இரண்டும் கலக்கின்றன. நாடகத்தில்தான் முத்தமிழையும் ஒருங்கே காண இயலும்.

91. கூத்தர் பேணி வளர்த்தவை:
   (1) இயற்றமிழ், இசைத்தமிழ்
   (2) நாடகம் , நடனம்
   (3) இசையும் , நடிப்பும்
   (4) வாணிகம், இசைக்கலை

92. புலவர்; பாணர்; கூத்தர் :
   (1) நடிப்பு, ஆடல், பாடல்
   (2) நாடகத்தமிழ், இயற்றமிழ், இசைத்தமிழ்
   (3) ஆடல், நடிப்பு, பாடல்
   (4) இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்

93. விறலியரின் வேறு பெயர்கள்:
   (1) கூத்தி, ஆடுமகள், ஆடுகளமகள்
   (2) பாணர், பாடினி, குறமகள்
   (3) புலவர், ஆடுமகள், விறலி
   (4) பொருநர், பாடினி, வல்லுனர்

94. கேட்டல் இன்பம்: ________.
   (1) நாடகம்,வணிகம்
   (2) இயல், இசை
   (3) ஆடுகளம், நுண்கலை
   (4) அறிவுடைமை, கேள்வி

95. கேள்வி, காட்சி இணைந்து ________, ________ பயக்கிறது.
   (1) கூத்து, அறிவு
   (2) இசை, இன்பம்
   (3) நாடகம், இன்பம்
   (4) இயல் பயன்

www.prepp.in



**96.** பிரித்தெழுதுக: இயற்றமிழ்: நுண்கலை

(1) இயல் + தமிழ் ; நுண்மை + கலை

(2) இயற்று +தமிழ்; நுண்+கலை

(3) இயலும் + தமிழ்; நு + இண் + கலை

(4) இயற் + தமிழ் ; நுண்ணிய + கலை

**97.** நடனமாடிய மகன், நடனமாடிய மகள்:

(1) செய்வினை, செயப்பாட்டுவினை

(2) தன்வினை, பிறவினை

(3) பண்புத்தொகை, பண்புத்தொகை

(4) பெயரச்சம், பெயரச்சம்

**98.** நாடகமே மிக்க பயனுடையது ஏனெனில்:

(1) ஆடல் , பாடல் ஆடுகளம் இணைந்தது

(2) இயல், இசை, காட்சி மூன்றும் இணைந்தது

(3) பொருநர், கூத்தார், பாணர் இணைந்தது

(4) புலவர், பாணர் விரும்புவது

**99.** நாடகம் என்பது இவ்வாறு விளக்கப்படுகிறது :

(1) கதை தழுவி வரும் பாட்டு

(2) கதை தழுவாத நடனம்

(3) கதை தழுவி வரும் கூத்து

(4) கதை தழுவி வரும் நுண்கலை

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 100-105)**

உருவடைய ஒன்றுபட வாழ்வு கொள்ள
உரிமை பெற இன்பமுற நாளும் நாட்டின்
இருள்கடிய அறிவுபெறப் பெருந்தொண்டாற்றி
இயங்குமோர் தன்மானக் கழகத்தாயின்
திருவடியின் அருளாகப் பல எண்ணங்கள்
செயற்படுத்தக் கிடைப்பனவாம்; அவற்றுள் ஒன்றே
தமிழிசையைப் பிறமொழியால் இசைத்தல் வேண்டாம்
தமிழிசைபா ராட்டிவீர் என்பதாகும்.

**100.** உருவடைய – இருள் கடிய – திருவடியின்:

(1) உவம உருபுகள்

(2) மோனைத் தொடை

(3) எதுகைச் சொற்கள்

(4) மூவகைச் சொற்கள்

**101.** பெருந் தொண்டாற்றி இயங்குவது எது?

(1) தன்மானக் கழகம்

(2) தன்மானத் தாய்

(3) நாட்டின் இயக்கம்

(4) தாய்க் கழகம்

**102.** தமிழிசை பாராட்ட _________ இசைத்தல் _________

(1) தமிழ் மொழியால், வேண்டாம்

(2) பிறமொழியால், வேண்டாம்

(3) தமிழிசையை, வேண்டாம்

(4) பிறமொழியால், வேண்டும்

www.prepp.in



**103.** உருவடை என்பது __________. ஒன்று பட என்பது __________. வாழ்வு கொள்ள என்பது __________.

(1) நல்ல வடிவம் பெறுதல்
தமிழர் ஒற்றுமை பெறுதல்
நல்ல வாழ்வு பெறுதல்

(2) அழகு பெறுதல்
ஓரிடத்தில் சேர்வது
இல்வாழ்வில் இணைவது

(3) தெய்வ வடிவம் அடைதல்
ஒன்றான தோற்றம் பெறுதல்
வாழ்க்கை கைப்பற்றுதல்

(4) தமிழில் உருவம் எழுதுதல்
தமிழரும் திராவிடரும் இணைதல்
மறுவாழ்வு தருதல்

**104.** தமிழிசையைப் பிறமொழியால் இசைத்தல் வேண்டாம் தமிழிசையை பாராட்டுவோம் என்பது __________

(1) திருவடியின் அருள்

(2) கழகத்தாயின் பல எண்ணங்களில் ஒன்று

(3) கழகத்தாயின் ஒரே குறிக்கோள்

(4) தொண்டாற்றும் இயக்கம்

**105.** நாட்டின் இருள் நீங்கினால் _________ பெறலாம் எனப் பாடல் கூறுகிறது.

(1) வாழ்வு

(2) அறிவு

(3) இன்பம்

(4) தன்மானம்

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 106-120)

**106.** தாய் மொழியை அடிப்படையாகக் கொண்ட பன்மொழிக் கற்றல் முறை எது?

(1) தாய்மொழியை மட்டும் கற்பது

(2) தாய் மொழி வழியாகக் கற்பது

(3) தாய் மொழியை முதலில் கற்றுப் பிறகு கூடுதலாகப் பிற மொழிகளைக் கற்பது

(4) பல மொழிகளையும் பிறநாட்டு மொழிகளையும் தாய் மொழியைப் போலக் கற்பது

**107.** பள்ளி வழி மொழிக் கல்விக் கொள்கை இவ்வாறு குறிப்பிடப்படுகிறது:

(1) பன்மொழிக் கல்வி

(2) கல்வியில் மொழி

(3) தாய்மொழியை அடிப்படையாகக் கொண்ட பன்மொழிக் கல்வி

(4) மும்மொழிக் கொள்கை

www.prepp.in



**108.** மொழி முழுமை அணுகுமுறை என்பது ________

(1) எழுத்து ஒலிப்பு முறை, சொற்கள், தொடர்கள் பிறகு வாக்கியங்கள் என்ற வரிசையில் மாணவர்கள் ஒரு மொழியைக் கற்கிறார்கள் என்ற கருதுகோள்.

(2) மாணவர்கள் மொழியை ஒரு திரளாகக் கற்றுப் பிறகு ஒலிப்பு, எழுத்து என்ற சிறு அலகுகளாகக் கற்கிறார்கள் என்னும் கருதுகோள்.

(3) மொழியின் சிறு அலகுகளான எழுத்து அகர வரிசை என்ற முறையில் தொடங்கி மொழியைக் கற்கிறார்கள் என்ற கருதுகோள்.

(4) எல்லா மொழிகளும் ஒரே வழிமுறையைப் பின் பற்றியே கற்கப்படுகின்றன என்னும் கருதுகோள்,

**109.** மொழி கற்றலில் மனப்பாடம் செய்தலை ஒரு அங்கமாக ஏற்றுக் கொள்ளும் அணுகுமுறை எது?

(1) அமைப்பியல் அணுகுமுறை

(2) இலக்கண மொழி பெயர்ப்பு முறை

(3) மொழித் தொடர்புறவு அணுகு முறை

(4) உடல் முழுமை ஈடுபடுத்தல் முறை

**110.** காவ்யா மொழி ஆசிரியர். அவர் மாணவர்களிடம் வெவ்வேறு உள்ளடக்கங்களுடன் உறவுடைய சொற்களைக் கண்டறிந்து அவற்றுடன் நெருக்க உறவுடைய சொற்களைக் கண்டு கூறுமாறு கேட்கிறார். (அதாவது ஒரு சொல்லுக்கு முன்பும் பின்பும் பொருந்திப் போகும் சொற்கள்). இந்த உத்திமுறை/ தொழில் நுட்ப முறை எவ்வாறு குறிப்பிடப் படுகிறது?

(1) சொல்லிணைவு ஒருங்கமைவு

(2) சொற்பின்னல்

(3) சொல் விளையாட்டு

(4) சொல்லுருவாக்கம்

**111.** தனது மாணவர்களில் மொழித்திறனை சோதித்து அறிய சில கேள்விகளை ஒரு ஆசிரியர் உருவாக்குகிறார். ஒரு பத்தியில் உள்ள சொற்களில் ஒவ்வொரு ஐந்தாவது சொல்லையும் விட்டு எழுதி விடுபட்ட சொற்களை எழுதும் படி கேட்கிறார். இந்தச் சோதனைக் கேள்வி முறை எவ்வாறு குறிப்பிடப்படுகிறது?

(1) படித்துப் பொருளறிதல்

(2) சொல்வளச் சோதனை

(3) கோடிட்ட இடங்களை நிரப்புதல்

(4) குளோஸ் டெஸ்ட்

www.prepp.in



**112.** பேசுதலில் சரியான சொற்களைச் சரியான வரிசையில் சரியான உச்சரிப்புடன் பயன்படுத்துதல்--------------.

(1) உடல் மொழி

(2) பேசுதலின் இயங்கு முறை

(3) மொழிச் செயல்பாடு

(4) பயன்படு மொழி

**113.** கற்பித்தலுக்கான துணைக்கருவியாக கதை சொல்லுதலை இதற்காகப் பயன்படுத்துகிறோம்:

(1) மாணவர்களைக் கவனித்தறிதல் பயிற்சியில் ஈடுபடுத்துவதற்காக

(2) மாணவர்களின் பேசுதல் திறன்களை மேம்படுத்துவதற்காக

(3) மொழித்திறன்களையும் படிப்பறிவையும் வளர்ப்பதற்காக

(4) வகுப்பறையில் ஒழுங்கமைதி காப்பதற்காக

**114.** இடப் பொருத்தம் சார்ந்த இலக்கணம் என்பதன் பொருள்.

(1) பயிற்சி மற்றும் கடும் பயிற்சி வழியாக இலக்கணத்தைக் கற்பது

(2) முதலில் வடிவத்தைக் கற்று பிறகு அதன் செயல்படு முறையைக் கற்பது

(3) இயல்பான மொழியின் எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்தி இடத்திற்கு ஏற்ற வகையில் வடிங்களை அறியும் கற்றல் முறை

(4) ஒரு மாணவர் படிநிலை முறையில் வளர்ச்சி அடையும் முறையில் கட்டமைக்கப்பட்ட வடிவத்தின் அமைப்பைக் கற்றல்.

**115.** பின்வருவனவற்றில் படிப் புத்திறன் எழுத்து சாராதது எது?

(1) விரிவுரை கேட்டு குறிப்பு எடுத்தல்

(2) வாசிக்கும் போது குறிப்பு எடுத்தல்

(3) ஆய்வுச் சுருக்கம் எழுதுதல்

(4) ஒரு நிகழ்ச்சிக்கான நிரலை எழுதுதல்

**116.** பாடநூல் உருவாக்குபவர்கள் எழுத்தாளர்கள் எழுதி நூல் களிலும், நாளிதழ்களிலும், ஏடுகளிலும் ஏற்கனவே வெளிவந்த உரைநடைப் பகுதிகள், கவிதைகள், கதைகளையே எப்போதும் எடுத்துத் தொகுத்து அளிக்கிறார்கள் ஏன்?

(1) அவை நம்பிக்கைக்குரிய இயல்பான மொழி வடிவங்கள்

(2) பாடநூல் உருவாக்குபவர்கள் அவற்றை விரும்புகிறார்கள்

(3) பாடப் பயிற்சியை உருவாக்க அவை பயனுடையவையாக உள்ளன.

(4) வாசிக்கப் பொருத்தம் உடையவையாக அவை உள்ளன.

www.prepp.in



117. இது எந்த வகைப் பயிற்சி முறை? ஆசிரியர் ஒரு பாடப் பகுதியைத் தனது வேகத்திற்கு ஏற்பப் படித்துக் கொண்டே செல்லும்போது மாணவர்கள் குழுவாக இணைந்து குறிப்புகளை எடுத்து அப்பாடப்பகுதியை மறுபடி எழுதி உருவாக்குகிறார்கள்.

(1) சொல்வதெழுதுதல்.

(2) இலக்கணச் சொல்வதெழுதுதல்

(3) மீள எழுதுதல் பயிற்சி

(4) பரிமாற்ற சொல்வதெழுதுதல்.

118. முதன்மை மொழி கற்றல் நிலை பொதுவாக இவ்வாறு அறியப்படுகிறது:

(1) கற்றல்

(2) பெறுதல்

(3) வளர்ச்சி

(4) அறிதல்

119. ஒன்றாம் வகுப்பு ஆசிரியர் ஒருவரிடம் பல தாய் மொழியைக் கொண்ட மாணவர்கள் பயில்கிறார்கள். வகுப்பில் உள்ளவர்கள் தனித்தனியே மற்றவரிடம் தம் தாய்மொழியில் வணக்கங்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும் என ஆசிரியர் கேட்கிறார். ஒவ்வோரு நாளும் ஒரே சொல் மற்ற மொழியில் எவ்வாறு சொல்லப்படுகிறது என்பதை அறிந்து கொள்ள மாணவர்கள் முயல்கிறார்கள். ஆசிரியர் கையாளும் உத்தி முறை எது?

(1) பல மொழித்தன்மையை மூலகமாகக் கொண்ட முறை

(2) பன்மொழிகலந்த முறை

(3) வேறுபடும் தன்மையை உத்தியாகக் கொண்ட முறை

(4) ஒரு மொழித் தன்மை கொண்ட உத்திமுறை

120. மாணவர்களுக்கு ஒரு மொழியை அறிமுகப்படுத்துவதற்கு உகந்த வழிமுறை இது இல்லை. எது அது?

(1) விளையாட்டுப் பாடல்கள், இசைப்பாடல்கள் பயன்படுத்தல்

(2) சொற்களையும் சிறுவாக்கியங்களையும் பயன்படுத்துதல்

(3) அகர வரிசையில் எழுத்துகளைக் கற்பித்தல்

(4) பேசுதல், கேட்டல் முறையில் ஈடுபடுத்தல்

தேர்வு எழுதுவோர் **தமிழைத்** தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே ***பகுதி* - V [கே.எண்: *121 - 150*]**க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part - V [Q.No. 121-150]**, if they have opted **TAMIL** as **LANGUAGE - II** only.

www.prepp.in



## PART – V
## LANGUAGE – II
## தமிழ்

பகுதி தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE – II) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே – V (கே.எண்: 121-150) க்கான விடைகளைத் தரவேண்டும்.

**(Q. Nos. 121-128) :**

கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் அங்கே இருந்த சுகாதரக் கேட்டிற்கோ எல்லையே இல்லை. எங்கும் தண்ணீர், குட்டையாகத் தேங்கிக் கிடந்தது. சில கக்கூசுகளே இருந்தன. அங்கிருந்த நாற்றத்தை இப்போது நினைத்தாலும் எனக்கு வெறுப்பாக இருக்கிறது. இதைப்பற்றித் தொண்டர்களிடம் சொன்னேன். அது எங்கள் வேலை அல்ல. தோட்டிகளின் வேலை என்று அவர்கள் திட்ட வட்டமாக பதில் சொல்லிவிட்டார்கள். விளக்குமாறு ஒன்று வேண்டும் என்று கேட்டேன். உடனே, அந்த நபர் ஆச்சரியத்தோடு என்னை விழித்துப் பார்த்தார். ஒரு விளக்குமாற்றைத் தேடிப் பிடித்துக் கக்கூசைச் சுத்தம் செய்தேன். ஆனால் எனக்காவே நான் சுத்தம் செய்து கொண்டேன். கூட்டமோ மிக அதிகம்: கக்கூசுகளோ மிகக் கொஞ்சம். ஆகையால் அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டியது அவசியமாயிற்று. ஆனால் அந்த வேலையை நான் ஒருவனாகச் செய்துவிடக் கூடியது அல்ல. ஆகவே என் காரியத்தை நான் பார்த்துக் கொள்ளுவதோடு திருப்தியடைய வேண்டியவனானேன். மற்றவர்கள் துர்நாற்றத்தைக் குறித்தோ அசுத்தத்தைப் பற்றியோ கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. அதோடு போகவில்லை சில பிரதிநிதிகள், தாங்கள் இருந்த அறைகளுக்கு வெளிப்புறமிருந்த தாழ்வாரத்தில் இரவு நேரத்தில் கொஞ்சமும் கவலைப்படாமல் மல ஜலம் கழித்து வந்தார்கள். காலையில் இந்த இடங்களைத் தொண்டர்களுக்குக் காண்பித்தேன். சுத்தம் செய்யும் வேலையை மேற்கொள்ள யாரும் தயாராக இல்லை. அதைச் செய்யும் கௌரவத்தில் என்னுடன் பங்கு கொள்ள யாரும் கிடைக்கவில்லை.

– காந்தியடிகள் சத்திய சோதனையில்

121. அடிக்கடி எதைச் சுத்தம் செய்ய வேண்டிய தாயிற்று?

(1) தண்ணீர்

(2) குட்டை

(3) விளக்குமாறு

(4) கக்கூஸ்

**122.** இந்தப் பத்தி காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டவர்களின்________ பற்றிக் குறிப்பிடுகின்றது.

(1) மாநாட்டில் கலந்து கொள்ளும் ஆர்வம்

(2) சுகாதாரம் குறித்த அக்கறை இன்மையை

(3) சுகாதாரம் மீதான ஆர்வம்

(4) சுகாதார ஊழியர் பற்றாக்குறை

**123.** மற்றவர்கள் ________ குறித்தோ ________ பற்றியோ கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

(1) தண்ணீர் , கக்கூஸ்

(2) துர்நாற்றம் அசுத்தம்

(3) மலம், ஜலம்

(4) மாநாடு, காங்கிரஸ்

**124.** சுத்தம் செய்யும் வேலையை மேற்கொள்ளத் தயாராக இல்லாதவர்கள்:

(1) தொண்டர்கள்

(2) சுகாதார ஊழியர்கள்

(3) இந்த நிகழ்ச்சியை விவரிப்பவர்

(4) மாநாட்டில் பங்குபெற்றோர்

**125.** காரியம் என்ற சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் :

(1) காரியம் (2) கனிமம்

(3) வேலை (4) கரி

**126.** செய்தேன் – இந்தச் சொல்லில் இறந்த காலத்தைச் சுட்டுவது :

(1) ஏன் (2) செய்

(3) த் (4) செய்து

**127.** அந்த வேலை நான் ஒருவனாகச் செய்துவிடக் கூடியதல்ல – எந்த வேலை?

(1) காங்கிரஸ் மாநாட்டில் உள்ள வேலை

(2) அடிக்கடி சுத்தம் செய்தால்

(3) தொண்டர்களுக்குக் காண்பிக்கும் வேலை

(4) பிரிதிநிதிகளிடம் சொல்லும் வேலை

**128.** ‘அது எங்கள் வேலை அல்ல’ – என்று பதில் கூறியவர்கள் :

(1) தொண்டர்கள்

(2) பிரதிநிதிகள்

(3) மற்றவர்கள்

(4) மாநாட்டினர்

www.prepp.in



கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 129-135)

தாம் வாழும் நிலத்தின் இயல்புக்கு ஏற்றவாறு மக்களின் வாழ்க்கை முறையும் பண்பாடும் அமையும் என்பது பண்டைய தமிழரின் சிறந்ததொரு கொள்கையாகும். அஃதுடன் காலம் என்ற தத்துவமும் மக்கள் வாழ்க்கையில் பேரிடங் கொண்டது. ஆகவே மக்கள் வாழ்ந்த இடமும், காலமும் அவர்களுக்குத் தேவையான முதற்பொருள் எனக் கொள்ள பட்டன. ஓரறிவுடைய புல் முதல் ஆறறிவுடைய மக்கள் ஈறாகிய உயிர்ப்பொருள்களும் ஏனைய உயிரில்லாத பொருள்களும் முதற்பொருளின் சார்பாக நின்று கருக்கொண்டு உலகின் மேல் தோற்றுகின்றன ஆகையால் அவற்றுக்குக் கருப்பொருள் என்று பெயர் வழங்கிற்று. மக்கள் வாழ்க்கையின் செய்திகளைப் புலப்படுத்துவது உரிப்பொருள் எனப் பெயர் பெற்றது. முதற்பொருள் இரண்டனுள் நிலமானது நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டது. இந்நான்கு பிரிவுகளல்லாமல் வேறொரு நிலப்பிரிவும் உண்டு. அதற்குப் பாலை என்று பெயர். முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல் இயல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப் பாலை என்பதோர் படிவங் கொள்ளும் என்று பாலை நிலம் விளக்கப்படுகின்றது. அதாவது கோடை வெய்யிலில் மரஞ்செடியில் உலர்ந்து நீர் நிலைகள் வறண்டு காணப்படும் இடங்கட்குப் பாலை என்று பெயர். இவ்வைந்து நிலத்தின் பாகுபாடுகளுக்குத் திணைகள் என்று பெயர்.

129. கருப்பொருள் எனப் பெயர் வழங்கக் காரணம்:

(1) கருப் பொருள்களிலிருந்து கருக்கொண்டு தோன்றுவது

(2) உரிப் பொருள்களிலிருந்து கருக்கொண்டு தோன்றுவது

(3) முதல் பொருள்களிலிருந்து கருக்கொண்டு தோன்றுவது

(4) கரு மற்றும் உரிப் பொருள்களிலிருந்து கருக் கொண்டு தோன்றுவது

130. _______ வாழ்க்கையின் _______ புலப்படுத்துவது _______

(1) மக்கள், செய்திகளைப், உரிப்பொருள்

(2) மக்கள், செய்திகளைப், உரிப்பொருள்

(3) மக்கள், செய்திகளைப், உரிப்பொருள்

(4) உயிரினங்கள், செயல்களைப். உரிப்பொருள்

131. _______ இரண்டில் _______ நான்கு வகையாகப் பகுக்கப்பட்டது.

(1) முதற்பொருள், காலம்

(2) உரிப் பொருள், நிலம்

(3) கருப்பொருள், காலம்

(4) முதற் பொருள், நிலம்

www.prepp.in



**132.** உலர்வன : _______ வறழ்வன : _______

(1) மரம், செடிகள், / நீர் நிலைகள்

(2) முல்லை, பாலை / நிலைங்கள்

(3) நிலங்கள் / மருதம்

(4) உயிர்ப் பொருள்கள் / உயிரில்லா பொருள்கள்

**133.** _______ திணைகள் _______ வகைப்படும்.

(1) தமிழ் நிறம் சார்ந்த , ஐந்து

(2) தமிழ் நிழல் சார்ந்த, ஐந்து

(3) தமிழ் நிலம் சார்ந்த, ஐந்து

(4) தமிழ் நிலம் சாராத, ஐந்து

**134.** திரிவது _______, இழப்பது _______. உறுத்துவது _______

(1) காலம், உயிர், துயர்

(2) முறை, இயல்பு, துயர்

(3) துயர், முறை, காலம்

(4) உயிர், காலம் , துயர்

**135.** தத்துவத்தில் __________ பெரும் இடம் கொண்டது.

(1) பண்பாடு

(2) திணைகள்

(3) உயிர்

(4) காலம்

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 136-150)**

**136.** அரசில் சட்டத்தின் 343 (2) பிரிவு இதற்கான அடிப்படையை வழங்குகிறது.

(1) ஹிந்தியை ஒரு அலுவல் மொழியாகப் பயன் படுத்துவது.

(2) ஹிந்தியை ஒரு துணை அலுவல் மொழியாகப் பயன்படுத்துவது

(3) ஆங்கிலத்தை ஒரு அலுவல் மொழியாகப் பயன் படுத்துவது

(4) ஆங்கிலத்தை ஒரு துணை அலுவல் மொழியாகப் பயன்படுத்துவது

**137.** செம்மொழி என ஒரு மொழியைத் தகுதிப்படுத்தும் விதிகளில் பின் வருவனற்றில் எது பொருந்தாது?

(1) அம்மொழி 1500 முதல் 2000ஆண்டு வரலாறும் எழுதப்பட்ட இலக்கியமும் கொண்டிருக்கிறது.

(2) தொன்மையான இலக்கியங் களும் காப்பியங்களிலும் அம்மொழியில் எழுதப் பட்டுள்ளன.

(3) அரசியல் அமைப்புப் பட்டியலில் அம்மொழி இடம் பெற்றிருக்கக் கூடாது.

(4) அம்மொழி வேறு மொழிகளில் இருந்து பெறப்படாத தூய இலக்கிய மரபு கொண்டதாக இருக்க வேண்டும்.

**138.** மாணவர்களின் கவனித்தறியும் திறனை இதன் வழியாக மதிப்பிட முடியும்.

(1) தொடர் பயிற்சி , கடும் பயில் முறை

(2) ஒரு கதையைக் கூறி புரிதல் திறனை அடிப்படையாகக் கொண்ட கேள்விகள் கேட்பது.

(3) அமைதியான வாசிப்புக்கு வாய்ப்பளிப்பது.

(4) இடங்களுக்குச் சென்று பார்க்க எற்பாடு செய்வது.

**139.** வாசிப்பின் தொடக்க கட்டத்தில் ஓர் ஆசிரியர் இதில் கவனம் செலுத்த வேண்டும் :

(1) மொழியின் அகரவரிசையை மனப்பாடம் செய்வது.

(2) வாசிப்பில் இயல்பு வேகம்

(3) எழுத்துக்கும் ஒலிப்புக்கும் உள்ள இணைப்பை வளர்த்தல்

(4) துல்லியமான வாசிப்பு

**140.** கவனித்தல், வாசித்தல் என்பவை:

(1) பெற்றறியும் திறன்கள்

(2) உருவாக்குதல் திறன்கள்

(3) ஆர்வத்திறன்கள்

(4) சிந்தித்தல் திறன்கள்

**141.** இளம் எழுத்தாளர்களின் தனித்தனித் தேவைக்கேற்ப ஆசிரியர்கள் அவர்களுடன் பரிமாற்றம் கொள்ள உகந்த முறை:

(1) எழுதியதில் உள்ள இலக்கணப் பிழைகள் பற்றி விரிவாக எழுதி அளித்தல்

(2) எழுதியதைப் புகழ்ந்து கூறுதல், அதில் இருந்து மேற்கோள் தந்து அது பற்றிய கருத்தைக் கூறுதல்

(3) பிழைகளைப் பற்றி பொருட்படுத்தத் தேவையில்லை என அவர்களிடம் கூறுதல்

(4) நன்றாக எழுதியவர்களுக்கு வகுப்பில் பரிசு அளித்தல்

**142.** மொழித் தன்வயப்படுத்தல், மொழிகற்றல் இரண்டுக்கும் இடையில் உள்ள அடிப்படை வேறுபாடு பின்வருவனவற்றில் எது?

(1) சரளத்தன்மை, துல்லியத்தன்மை

(2) மொழியுடன் கொள்ளும் நெருக்க உறவு

(3) துல்லியத்தன்மை, இயல்புவேகம்

(4) இயல்புவேகம், உச்சரிப்புமுறை

www.prepp.in



143. தாய்மொழியை ஆதாரமாகக் கொண்ட கற்றல் குறித்து தவறான கருத்தைக் கூறும் வாசகம் எது ?

(1) கற்க, சிந்திக்க, கருத்துப் பரிமாற்றம் செய்ய குழந்தைகளுக்கு அது உதவுகிறது

(2) மொழிப்பொருளை உருவாக்கும் செயல்பாட்டில் அது ஆக்கபூர்வமான பங்கை வழங்குகிறது.

(3) தாய்மொழி கற்றலுக்குரிய பரப்பை மிக விரிவானதாக்குகிறது.

(4) இரண்டாம் மொழி ஒன்றைப்பற்றிக் கவலைப் படாமல் இருக்க அது உதவுகிறது.

144. தொடக்கக் கல்வி கற்கும் ஒரு குழந்தையின் மொழி வளர்ச்சியில் மிகவும் முக்கியத்துவமுடையது, பின் வருவனவற்றில் எது?

(1) இலக்கண அறிவு

(2) மொழிவளம் கொண்ட சூழல்

(3) மொழிப் பாடநூல்

(4) மாணவரை மதிப்பிடுதல்

145. பணிப்பதிவு தொகுப்பு என்ற போர்ட்போலியோ இதற்கு உதாரணமாகிறது.

(1) சுய மதிப்பீடு

(2) ஆசிரியர் மதிப்பீடு

(3) சுயமதிப்பீடு, ஆசிரியர் மதிப்பீடு இரண்டும்

(4) கல்விக் கழக மதிப்பீடு

146. குறுக்கெழுத்துப் போட்டி இதனை வளர்க்க உதவுகிறது :

(1) கவனித்தறியும் திறன்

(2) எழுத்துத் திறன்

(3) சொல்வளம்

(4) இலக்கிய அர்த்தம்

www.prepp.in
Prepp
Your Personal Exams Guide



**147.** பேச்சுச் செயல்பாட்டை மதிப்பிடுவதற்கு தேவையற்ற ஒன்று பின் வருவனவற்றில் எது?

(1) எழுத்து ஒலிப்பு உச்சரிப்பு

(2) இடப் பொருத்தமுடைய சொற்களைச் சரியாகப் பயன்படுத்துவது

(3) அகராதி பேரகராதி பயன்படுத்தல்

(4) பேச்சில் தெளிவு

**148.** ஒரு மொழியின் எழுத்துக்களையும் அவற்றின் ஒலிப்பு முறையும் உறவு படுத்தி வாசிக்கப் பயிற்றும் முறை:

(1) நேரடி முறை

(2) ஒலியன் முறை

(3) முழு-மொழி முறை

(4) பகுதி – மொழி முறை

**149.** பாட நூலுக்கு வெளியே சென்று கற்பிப்பது என்பது :

(1) பாடநூலுக்கு அப்பால் இருந்து கற்பிப்பதற்கான பகுதிகளைத் தருவது

(2) பாடநூலை விட்டு விட்டு வேறு பகுதிகளைக் கற்பிப்பது

(3) அறிவு பாடநூலை மையமாகக் கொண்டதாக இருக்க வேண்டும்

(4) பாடநூலைக் கடந்த பகுதிகளை அளித்து மாணவர்களை அதிகப் பாடச்சுமைக்கு ஆளாக்காமல் இருப்பது.

**150.** மூன்றாம் வகுப்பு மாணவர்களிடம் ஆசிரியர் அஞ்சல் உறை தயாரிப்பது எப்படி என்று விளக்குகிறார். மாணவர்கள் அதனைப் பின்பற்றிச் செய்கிறார்கள். ஒரு மொழி வகுப்பில் இவ்வகைச் செயல்பாடு மாணவர்களுக்கு இவ்வகையில் உதவி புரியும் :

(1) எழுத்துத்திறனனை வளர்க்கும்

(2) பேச்சுத்திறனை வளர்க்கும்

(3) கவனித்தறியும் திறனை வளர்க்கும்

(4) படைப்புதிறனை வளர்க்கும்

www.prepp.in



## SPACE FOR ROUGH WORK

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide



**கீழ்வரும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்**

1. கேள்விகளுக்கு விடையளிக்கும் முன் தேர்வு நூற்கட்டில் உள்ள விளக்கங்களைக் கவனமாகப் படிக்கவும், விடையளிக்க வேண்டிய வேறுபட்ட முறைகள் அதில் விளக்கப்பட்டுள்ளன.
2. பக்கம் 2-ல் ஓஎம்ஆர் (OMR) விடைத்தாளில் உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய நான்கு விடைகளில் மிகச் சரியான ஒரு விடையை மட்டும் நீலம் பந்துருள்முனைப் பேனாவினால் முழுவதுமாக மைபட்டை தீட்டப்பட வேண்டும்.
3. தேர்வு எழுதுபவர் அவர்தம் விடைத்தாள் மடிந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். விடைத் தாளில் எவ்விதமான அடித்தல் திருத்தலும் செய்தல் கூடாது. விடைத்தாளில் உரிய இடத்தில் மட்டுமின்றிப் பிற எங்கும் தேர்வு வரிசை எண்ணைக் குறிப்பிடக் கூடாது.
4. எச் சூழ்நிலையிலும் (தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு/எண்ணும் தேர்வு விடைத்தாள் குறியீடு/எண்ணும் தம்முள் முரண்படும் நிலையில் மட்டுமன்றி) தேர்வு எழுதுபவருக்கு வேறொரு விடைத்தாள் இணை அளிக்கப்படாது. ஆகவே தேர்வு நூற்கட்டையும் விடைத்தாளையும் தேர்வு எழுதுபவர் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.
5. தேர்வு எழுதுபவர் தேர்வு வருகைத் தாளில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தேர்வு நூற்கட்டு மற்றும் விடைத்தாள் குறியீடு மற்றும் எண்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.
6. ஓ.எம்.ஆர் விடைத்தாளில் உள்ள தகவல்களை ஒரு இயந்திரம் மதிப்பிட உள்ளது. அதனால் தகவல் எதுவும் விடுபடாமல் இருப்பதும் அனுமதி அட்டையில் தரப்பட்டிருப் பதிலிருந்து மாறுபடாமல் இருப்பதும் அவசியம்
7. தேர்வு எழுத அனுமதி அட்டை தவிர மற்றபடி அச்சு/கையெழுத்துக் குறிப்புகள், துணுக்குகள், பேஜர், செல்போன், மின்சாதனம் எதனையும் தேர்வுக் கூடத்திற்குள் தேர்வு எழுதுவோர் கொண்டு செல்லக் கூடாது.
8. தேர்வு அறைக்குள் அலைபேசி கருவிகள், தொலைத்தொடர்புக் கருவிகள் (செயல் நிறுத்தப்பட்ட நிலையில் கூட) மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்கள் எதுவும் கொண்டுவரப்படக் கூடாது. இதனைக் கடைபிடிக்காத தேர்வு எழுதுவோர் முறைமீறியவராக கொள்ளப்பட்டு தேர்விலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுது உட்பட பிற நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரும்.
9. தேர்வு மேற்பார்வையாளர் வினவும் போது தேர்வு எழுதுபவர் தம் அனுமதி அட்டையைக் காண்பிக்க வேண்டும்.
10. தேர்வுக் இடக் கண்காணிப்பாளர்/தேர்வு மேற்பார்வையாளர் சிறப்பு அனுமதியின்றித் தேர்வு எழுதுபவர் தம் இருக்கையிலிருந்து வெளியேறக் கூடாது.
11. தேர்வு மையத்திற்குள் நுழைதல், தேர்வு மையத்திலிருந்து வெளியேறுதல் ஆகிய இரு வேளையிலும் தேர்வு வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாமலும், விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்காமலும் வெளியேறக் கூடாது. வெளியேறுகையில் வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாத தேர்வு எழுதுபவரின் விடைத்தாள் திருப்பி அளிக்கப்படாததாகக் கருதப்படும். இந்த முறை மீறிய செயலுக்கு உரிய எதிர்வினை மேற்கொள்ளப்படும்.
12. மின் இயங்கு/மின் இயங்காக் கணிப்பான்களுக்கு அனுமதி இல்லை.
13. தேர்வு ஆணையத்தின் அனைத்துவிதமான நடத்தை விதிமுறைகளுக்கும் தேர்வு எழுதுபவர் கட்டுப்படுவது கட்டாயம். முறை மீறிய செயல்கள் மீது தேர்வாணையத்தின் விதிமுறைகள்படி நடவடிக்கை எடுக்கப்படும்.
14. எச் சூழலிலும் தேர்வு நூற்கட்டும் விடைத்தாளும் தனித்தனியே பிரிக்கப்படக் கூடா.
15. தேர்வு எழுதி முடித்தபின் தேர்வு எழுதுபவர் தம் விடைத்தாளை மேற்பார்வையாரிடம் திருப்பி அளிக்க வேண்டும். தேர்வு எழுதுவோர் இத் தேர்வு நூற்கட்டை உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

www.prepp.in
Prepp Your Personal Exams Guide



**निम्नलिखित निर्देशों को ध्यान से पढ़ें :**

1. जिस प्रकार से विभिन्न प्रश्नों के उत्तर दिए जाने हैं उसका वर्णन परीक्षा पुस्तिका में किया गया है, जिसे आप प्रश्नों का उत्तर देने से पहले ध्यान से पढ़ लें ।
2. प्रत्येक प्रश्न के लिए दिए गए चार विकल्पों में से सही उत्तर के लिए OMR उत्तर पत्र के **पृष्ठ-2** पर केवल एक वृत्त को ही पूरी तरह **काले/नीले बॉल पॉइन्ट पेन** से भरें । एक बार उत्तर अंकित करने के बाद उसे बदला नहीं जा सकता है ।
3. परीक्षार्थी सुनिश्चित करें कि इस उत्तर पत्र को मोड़ा न जाए एवं उस पर कोई अन्य निशान न लगाएँ । परीक्षार्थी अपना अनुक्रमांक उत्तर-पत्र में निर्धारित स्थान के अतिरिक्त अन्यत्र न लिखें ।
4. परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र का ध्यानपूर्वक प्रयोग करें, क्योंकि किसी भी परिस्थिति में (केवल परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र के संकेत या संख्या में भिन्नता की स्थिति को छोड़कर) दूसरी परीक्षा पुस्तिका उपलब्ध नहीं करायी जाएगी ।
5. परीक्षा पुस्तिका / उत्तर पत्र में दिए गए परीक्षा पुस्तिका संकेत व संख्या को परीक्षार्थी सही तरीके से हाज़िरी-पत्र में लिखें ।
6. OMR उत्तर पत्र में कोडित जानकारी को एक मशीन पढ़ेगी । इसलिए कोई भी सूचना अधूरी न छोड़ें और यह प्रवेश-पत्र में दी गई सूचना से भिन्न नहीं होनी चाहिए ।
7. परीक्षार्थी द्वारा परीक्षा हॉल/कक्ष में प्रवेश-पत्र के सिवाय किसी प्रकार की पाठ्य-सामग्री, मुद्रित या हस्तलिखित, कागज़ की पर्चियाँ, पेजर, मोबाइल फोन, इलेक्ट्रॉनिक उपकरण या किसी अन्य प्रकार की सामग्री को ले जाने या उपयोग करने की अनुमति नहीं है ।
8. मोबाइल फोन, बेतार संचार युक्तियाँ (स्वीच ऑफ अवस्था में भी) और अन्य प्रतिबंधित वस्तुएँ परीक्षा हॉल/कक्ष में नहीं लाई जानी चाहिए । इस सूचना का पालन न होने पर इसे परीक्षा में अनुचित साधनों का प्रयोग माना जाएगा और उनके विरुद्ध कार्यवाही की जाएगी, परीक्षा रद्द करने सहित ।
9. पूछे जाने पर प्रत्येक परीक्षार्थी, निरीक्षक को अपना प्रवेश-पत्र दिखाएँ ।
10. केन्द्र अधीक्षक या निरीक्षक की विशेष अनुमति के बिना कोई परीक्षार्थी अपना स्थान न छोड़ें ।
11. कार्यरत निरीक्षक को अपना उत्तर पत्र दिए बिना एवं हाज़िरी-पत्र पर दुबारा हस्ताक्षर किए बिना परीक्षार्थी परीक्षा हॉल/कक्ष नहीं छोड़ेंगे । यदि किसी परीक्षार्थी ने दूसरी बार हाज़िरी-पत्र पर हस्ताक्षर नहीं किए, तो यह माना जाएगा कि उसने उत्तर पत्र नहीं लौटाया है और यह अनुचित साधन का मामला माना जाएगा । **परीक्षार्थी अपने बाएँ हाथ के अंगूठे का निशान हाज़िरी-पत्र में दिए गए स्थान पर अवश्य लगाएँ ।**
12. इलेक्ट्रॉनिक / हस्तचालित परिकलक का उपयोग वर्जित है ।
13. परीक्षा हॉल/कक्ष में आचरण के लिए परीक्षार्थी बोर्ड के सभी नियमों एवं विनियमों द्वारा नियमित हैं । अनुचित साधनों के सभी मामलों का फैसला बोर्ड के नियमों एवं विनियमों के अनुसार होगा ।
14. किसी हालत में परीक्षा पुस्तिका और उत्तर पत्र का कोई भाग अलग न करें ।
15. **परीक्षा सम्पन्न होने पर, परीक्षार्थी हॉल / कक्ष छोड़ने से पूर्व उत्तर पत्र कक्ष-निरीक्षक को अवश्य सौंप दें । परीक्षार्थी अपने साथ इस परीक्षा पुस्तिका को ले जा सकते हैं ।**

**READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY:**

1. The manner in which the different questions are to be answered has been explained in the Test Booklet which you should read carefully before actually answering the questions.
2. Out of the four alternatives for each question, only one circle for the correct answer is to be darkened completely with **Black/Blue Ball Point Pen** on **Side-2** of the OMR Answer Sheet. The answer once marked is not liable to be changed.
3. The candidates should ensure that the Answer Sheet is not folded. Do not make any stray marks on the Answer Sheet. Do not write your Roll No. anywhere else except in the specified space in the Answer Sheet.
4. Handle the Test Booklet and Answer Sheet with care, as under no circumstances (except for discrepancy in Test Booklet Code or Number and Answer Sheet Code or Number), another set will be provided.
5. The candidates will write the correct Test Booklet Code and Number as given in the Test Booklet / Answer Sheet in the Attendance Sheet.
6. A machine will read the coded information in the OMR Answer Sheet. Hence, no information should be left incomplete and it should not be different from the information given in the Admit Card.
7. Candidates are not allowed to carry any textual material, printed or written, bits of papers, pager, mobile phone, electronic device or any other material except the Admit Card inside the examination hall/room.
8. Mobile phones, wireless communication devices (even in switched off mode) and the other banned items should not be brought in the examination halls/rooms. Failing to comply with this instruction, it will be considered as using unfair means in the examination and action will be taken against them including cancellation of examination.
9. Each candidate must show on demand his / her Admit Card to the Invigilator.
10. No candidate, without special permission of the Centre Superintendent or Invigilator, should leave his / her seat.
11. The candidates should not leave the Examination Hall/Room without handing over their Answer Sheet to the Invigilator on duty and sign the Attendance Sheet twice. Cases where a candidate has not signed the Attendance Sheet second time will be deemed not to have handed over the Answer Sheet and dealt with as an unfair means case. **The candidates are also required to put their left hand THUMB impression in the space provided in the Attendance Sheet.**
12. Use of Electronic / Manual Calculator is prohibited.
13. The candidates are governed by all Rules and Regulations of the Board with regard to their conduct in the Examination Hall/Room. All cases of unfair means will be dealt with as per Rules and Regulations of the Board.
14. No part of the Test Booklet and Answer Sheet shall be detached under any circumstances.
15. **On completion of the test, the candidate must hand over the Answer Sheet to the Invigilator in the Hall / Room.** ***The candidates are allowed to take away this Test Booklet with them.***